**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OS | 269 | of | 2018 |

**2025-ம் ஆண்டு ஜூலை திங்கள் 02 ம் நாளான இன்று**

| | |
|---|---|
| **வாதி/பிரதிவாதி**<br>**மனுதாரர்/எதிர்மனுதாரர்** | **தரப்பில் வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.** |

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **கண்ணன்** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்- 02.07.2025.**

**வா.சா.-1**

**3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -**

என் சகோதரர் பழனியின் மகன் மற்றும் மகள்தான் 3,4 பிரதிவாதிகள். என்சகோதரர் 25.03.1993 ல் இறந்துவிட்டார். அவர்இறக்கும் தருவதாயில் கடலுரில் health department ல் வேலை பார்த்தார். அவர் இறக்கும் போது 4 ம் பிரதிவாதியின் வயது 1 ½ ஆண்டுகள் என்றால் சரிதான். அவர் இறந்ததால் கிடைத்த death benefits என் பெற்றோர் நான், 3,4 பிரதிவாதிகள் மற்றும் என் சகோதரி ஆகியோர் பகிர்ந்து கொண்டோம் என்றால்சரியல்ல. என் தாயார் மட்டும் அவருக்குரிய பங்கை பெற்றார். என் தகப்பனாருக்கு மரக்காணம் கிராமத்தில் சொத்துக்கள் உள்ளன என்றால் அதை

மறுக்கிறேன். மரக்காணம்கிராமத்தில் இருந்த சொத்து என் தாயாருடையது ஆகம். அது என் தாயாருக்கும் அவருடைய சகோதரர்களுக்கும் இடையே ஏற்பட்ட ஏற்பாட்டின் அடிப்படையில் என் தாயாருக்கு கிடைத்த சொத்தாகம். எந்த வருடம் அவ்வாறு ஏற்பாடு அவர்களுக்குள் நடந்தது என்று எனக்கு தெரியாது. ஆவணங்களை பார்த்தால்தான் சொல்ல முடியும். ஆவணங்களை தேடிப் பார்க்க வேண்டும். அந்த சொத்து 2022ம் ஆண்டு என் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தாயார் எனக்கு தான செட்டில்மண்ட் எழுதி வைத்தார். அந்த தான செட்டில்மண்ட் பத்திரம் என்னிடம்தான் உள்ளது. அதை என்னால் தாக்கல் செய்ய முடியும். அந்த ஆவணத்தை தாக்கல் செய்தால் இந்த சொத்தின் வரலாறு தெரிய வரும் என்றால் சரிதான். கிராம நத்தம் சர்வே எண் 942/13 சொத்தின் மொத்த விஸ்தீரணம் 9 சென்ட் ஆகும். என் தகப்பனாரின் பூர்வீக கிராமம் பாண்டிச்சேரி அருகில் உள்ள ராயபுதுப்பாக்கம் ஆகும். என் தாயாரின் பூர்வீகம் மரக்காணம் ஆகும். என் தகப்பனார் 2002ம் ஆண்ட இறந்த பிறகு அவரின் வாரிசுகள் 3,4 பிரதிவாதிகள் தவிர அனைவரும் சேர்ந்து என் தகப்பனாருக்கு சொந்தமான சில சொத்துக்கள் மரக்காணம் கிராமத்தில் இருந்தவற்றை விற்றுவிட்டோம் என்றால் சரியல்ல. கிராம நத்தம் சர்வே எண் 942/13 சொத்து என் தகப்பனாருக்கு சொந்தமானது என்றும், ஆகவே பாகப்பிரிவினை வழக்கில் அந்த சொத்தை சேர்க்காதது தவறு என்றும் சொன்னால் சரியல்ல. என் அண்ணன் இறந்த

பிறகு என் அண்ணியும் 1 ½ வயது குழந்தையும் எங்கே சென்றார்கள் என்று இதுநாள் வரை தெரியவில்லை. சுமார்10 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பஞ்சாயத்து கூட்டப்பட்டு நடந்தது. மரக்காணத்தில் பொது இடத்தில் வைத்து பஞ்சாயத்து நடந்தது.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu